உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமும் மெட்ரோலின்க்ஸ் (Metrolinx ) அமைப்பும் சேர்ந்து க்வீன்ஸ்ட்ரீட் விரைவுப் பேருந்து சேவை பற்றிய ஆய்வில் முன்னேறிச் செல்கின்றன

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 18, 2020) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமும் மெட்ரோலின்க்ஸ் (Metrolinx ) அமைப்பும் சேர்ந்து, தங்கlின் பேருந்து போக்குவரத்து சேவையில் மிகப்பெரிய ஒரு மைல் கல்லை அடைந்துள்ளனர்; அதாவது க்வீன்ஸ்ட்ரீட் விரைவுப் பேருந்துச் சேவை பற்றிய ஆய்வினை (Queen Street Bus Rapid Transit (BRT) study) செய்தபடி முன்னேறிச் செல்கின்றனர்.

க்வீன் ஸ்ட்ரீட் என்பது, நகரில் விரைவான பேருந்துப் போக்குவரத்திற்கான மூலாதாரத் திட்டமாகும் (Transportation Master Plan), க்வீன் ஸ்ட்ரீட் பகுதியானது ப்ராம்ப்ட்டன் நகரிலேயே மிகவும் சுறுசுறுப்பான பகுதியாகும்; இது வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் 28,000 பேருந்து பயணிகளைக் கையாளுகிறது. அடுத்த 25 ஆண்டுகளில் நகரத்தில் மக்கள்தொகை மற்றும் வேலைவாய்ப்பு சுமார் 40 முதல் 50 சதவீதம் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இந்தப் பகுதிக்கான போக்குவரத்து தேவைகளும் அதிகரிக்கும். இந்த மக்கள்தொகை மற்றும் வேலைவாய்ப்பில் ஏற்படவிருக்கின்ற வளர்ச்சிக்கு ஈடு கொடுப்பதற்கு விரைவான போக்குவரத்து வசதி அவசியமாகிறது; இது நகரின் அமைவிடங்களுக்கு இடையேயான இணைப்பை மேம்படுத்துகிறது மற்றும் ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கு கட்டுபடியாகும் செலவில் பயணிப்பதற்கான ஒரு தேர்வை வழங்குகிறது

இந்த க்வீன் ஸ்ட்ரீட் BRT பற்றிய ஆய்வானது, க்வீன்ஸ்ட்ரீட்டில் தற்போதுள்ள ஜூம் சேவைகளை முற்றிலுமாகவே விரைவான பேருந்து போக்குவரத்திற்கு தேவையான தனித்துவமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பாதைகளுடன் மேம்படுத்தவும், யார்க் பிராந்தியத்தில் (York Region) இருந்து விவா பிஆர்டி ரேபிட்வேயை (Viva BRT Rapidway) நீட்டித்து விரிவுபடுத்தவும் பரிந்துரைக்கிறது. ஆய்வின் இந்த அடுத்த கட்டத்தில், நகர நிர்வாகமும் மெட்ரோலின்க்ஸ் (Metrolinx ) அமைப்பும் சேர்ந்து அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தொடங்கவிருக்கின்ற சுற்றுச்சூழல் மதிப்பீட்டினைத் தயார் செய்யத் துவங்கலாம், இது பூர்வாங்க வடிவமைப்பு பணிகளுக்கு வழிவகுக்கும்.

க்வீன்ஸ்ட்ரீட் விரைவுப் பேருந்து போக்குவரத்து பற்றிய மேலும் தகவல்களுக்கு, வருகை தரவும் www.brampton.ca/QSBRT

**பின்புலம்:**

- ஏறக்குறைய 21,000 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் ப்ராம்ப்ட்டனின் தற்போதைய விரைவான போக்குவரத்துக்கு Züm சேவையை (வழித்தடங்கள் 501/501A / 501C) பயன்படுத்துகின்றனர்
- ப்ராம்ப்ட்டன் நகரமானது, கனடாவில் விரைவாக வளர்ந்து வரும் பேருந்து போக்குவரத்து அமைப்புகளில் ஒன்றாகும். கடந்த பத்து ஆண்டுகளில், மக்கள்தொகை வளர்ச்சியில் 27 சதவீதத்துடன் ஒப்பிடும்போது பயணிகள் எண்ணிக்கை 160 சதவீதம் அதிகரித்துள்ளது, அதே கால அவகாசத்தில் தனிநபர் போக்குவரத்து செய்யும் எண்ணிக்கையும் இரட்டிப்பாகியுள்ளது.
- க்வீன் ஸ்ட்ரீட்டில் விரைவான போக்குவரத்துக்கான திட்டமிடலானது, மெட்ரோலின்க்ஸ் (Metrolinx) தலைமையிலான ஒட்டுமொத்த பிராந்திய போக்குவரத்து திட்டத்துடன் (overall regional transportation plan) இணைக்கப்பட்டுள்ளது.
- க்வீன்ஸ்ட்ரீட் ஆரம்ப கட்ட தொழில்முறைக்கான (Queen Street BRT Initial Business Case) ஆய்வானது ப்ராம்ப்ட்டனின் மேற்குப் பகுதியில் உள்ள மிஸ்ஸிஸ்ஸாகா சாலையில் இருந்து கிழக்கில் சிட்டி ஆஃப் வாகன் (City of Vaughan) வரைக்கும் உள்ள இடைப்பட்ட பகுதிமீது கவனம் செலுத்துகிறது.
- இந்த திட்டமானது, க்வீன்ஸ்ட்ரீட் (Queen Street )-ஐ "மேம்படுத்தலில் இருக்கின்ற" ஒரு திட்டமாகவும், 2041 ஆம் ஆண்டிற்கான பிராந்திய போக்குவரத்து திட்டத்தின் கீழாக வருகின்ற அதிக ஓட்டங்கள் கொண்ட விரைவான போக்குவரத்து வலையமைப்பின் (Frequent Rapid Transit Network )முக்கிய அங்கமாகவும் ஆக்க உறுதி கொடுத்துள்ளது.

குறிப்பு: பயணிகள் எண்ணிக்கை பற்றிய தரவுகள், மார்ச் 2020 இல் ஏற்பட்ட கோவிட்-19 தொற்று பரவலுக்கு முன்னர், இயல்பாக நடந்துகொண்டிருந்த இயக்க நிலையின் இருந்த தரவுகளாகும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"இந்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம், க்வீன் ஸ்ட்ரீட் விரைவுப் பேருந்து போக்குவரத்துக்கான ஆய்வை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்ற மெட்ரோலின்க்ஸ் (Metrolinx ) இன் தலைமைப்பண்பு மற்றும் அர்ப்பணிப்புக்காக, அவர்களுக்கு நன்றி. பேருந்து போக்குவரத்து என்பது ஆரோக்கியமான ஒரு சமூகம் மற்றும் அதன் பொருளாதாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும்; மேலும் இது போன்ற அடித்தளமிடும் பணிகளில் முன்னேறிச் செல்வது என்பது ஒரு பன்முகம் கொண்ட, இளமையான, துடிப்பான மற்றும் வேகமாக வளர்ந்து வரும் நகரத்தின் வளர்ச்சியை ஆதரிக்க உதவும். இந்த முக்கியமான திட்டப்பணியை முன்னெடுத்துச் செல்வதற்காக, மெட்ரோலின்க்ஸில் எங்கள் கூட்டாளர்களுடன் தொடர்ந்து பணியாற்ற ப்ராம்ப்ட்டன் நகர சபை எதிர்நோக்கி காத்திருக்கிறது. "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ ப்ராம்ப்ட்டன் நகரமானது, கனடாவின் மிக வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், மேலும் பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான அனைத்தும் உள்ளடக்கிய ஒரு நகரத்தை உருவாக்குவதற்கு, போக்குவரத்தில் முதலீடு செய்வது மிகவும் முக்கியமாகும். க்வீன்ஸ்ட்ரீட் BRT திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்பது போக்குவரத்துக்கான அணுகலை மேம்படுத்தில் ஒரு முக்கிய அம்சமாமாகும், அதே நேரத்தில் ப்ராம்ப்ட்டனை ஒரு பசுமை நகரமாக மேம்படுத்துவதோடு, 2050 ஆம் ஆண்டளவில் கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வை 80 சதவிகிதம் குறைப்பதற்கான நமது காலநிலை மாற்ற இலக்கையும் அடைகிறது. இது எங்கள் அரசாங்கத்தின் பல்வேறு நிலைகளில் இருப்பவர்கள் செய்யும் பணிகள் காரணமாக நமது பன்முகம் கொண்ட குடியிருப்பாளர்கள் எவ்வாறு பயன் பெறுகிறார்கள் என்பதற்கான மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். "

– ரொவீனா சான்ட்டோஸ், கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைமைப் பொறுப்பு, சமுதாய சேவைகள் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்

“இது எங்களுக்கு நகரம் பற்றிய ஒரு பரவசமூட்டுகின்ற செய்தியாகும். க்வீன் ஸ்ட்ரீட்டில் விரைவான போக்குவரத்துக்கான ஒரு சீரான போக்குவரத்து வழி மூலம், ப்ராம்ப்ட்டன் மற்றும் அதைச் சேர்ந்த பகுதியை அதிக நெருக்கம் கொண்டபடி, வாழத்தகுதியான, வேலைவாய்ப்பு நிறைந்த , விளையாடி மகிழ்வதற்கான ஒரு இடமாக ஆக்க முடியும். க்வீன் ஸ்ட்ரீட் BRT ஆனது, நகரின் சில முக்கிய இடங்களை இணைப்பதோடு மட்டுமல்லாமல், ப்ராம்ப்ட்டன் நகரத்தை பிரமீலியா சிட்டி சென்டர், வாகன் மெட்ரோபொலிட்டன் சென்டர், ரிச்மண்ட் ஹில் சென்டர், மார்க் ஹாம் சென்டர் ஆகியவற்றுடன் இணைக்கின்ற மிகப்பெரிய, பிராந்தியங்களுக்கு இடையிலான வழித்தடங்களிலும், மற்றும் அதற்கு அப்பாலும் ஒரு முக்கியமான இணைப்பை வழங்கும்.

- ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10

“COVID-19 தொற்றுபரவலுக்கு நாங்கள் தொடர்ந்து செவிசாய்க்கின்ற அதே வேளையில், நமது ஊழியர்கள் எங்கள் நகரத்தை முன்னெடுத்து செல்வதற்கான அத்தியாவசிய மற்றும் முக்கியமான பணிகளில் உறுதியாக உள்ளனர். இந்த குறிப்பிடத்தக்க திட்டத்தை முன்னெடுப்பதில் தொடர்ந்து ஒத்துழைத்துள்ள நகர ஊழியர்களுக்கும் மெட்ரோலின்க்ஸ் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் கவுன்சில் முன்னுரிமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு க்வீன் ஸ்ட்ரீட் BRT முக்கியமான ஒரு விஷயமாகும், மேலும் புதுமைபடைக்கும் பகுதியின் தாழ்வாரத்தில் ப்ராம்ப்ட்டனின் நிலையை மேலும் உறுதிப்படுத்த உதவும். ”

– டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம்,

தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்